திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்:-

முன்னிலை: திரு.ம.மரிய சகாய ஆன்டனி, M.A

உதவி இயக்குநர்

இடம்: திருநெல்வேலி

**செயல்முறை ஆணை எண்: அ1/1610/ 2024, நாள்: 26.09.2024.**

பொருள் : பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்பு பிரிவு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி -IV தேர்வின் வழி இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவுதாரர் பட்டியல் பெறப்பட்டது – சார்நிலை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு - திருமதி.ஆ.அனுசித்ரா, திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை – பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.22.07.2008.
2. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.1939/PSD-D2/2023 நாள்.04.09.2023.
3. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை. சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/13013/2023 நாள்.10.10.2023.
4. உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/1745/2023, நாள். 11.10.2023
5. மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை, சென்னை கடித எண்.8296206/பயிற்சி-1/2024-1, நாள்.15.09.2024.

---------------

**ஆணை:**

பார்வை 2-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ஆ.அனுசித்ரா, அவர்கள் பார்வை 3-ல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார். இதனைத்தொடர்ந்து பார்வை 4-ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி அவர்களில் செயல்முறை ஆணையின் படி இப்பணியாளருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி- IV -ன் கீழ் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

Scanned with OKEN Scanner

திருமதி.ஆ.அனுசித்ரா அவர்கள் திருநெல்வேலி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 13.10.2023 அன்று முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து, பார்வை-5ல் காணும் கடிதத்தில் அறிவுறுத்தியவாறு திருமதி.ஆ.அனுசித்ரா, இளநிலை உதவியாளர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 13.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

திருமதி.ஆ.அனுசித்ரா, இளநிலை உதவியாளர், அவர்கள் அவர் பணியில் சேர்ந்த நாளான 13.10.2023 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (She is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இத்தகுதிகாண் பருவக்காலத்தில், பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி, தனியர் "தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்" தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும், இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடன் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஒ.ப. [signature] 26/9/24

உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
திருநெல்வேலி.

26/09/24

26/09/24

பெறுநர்:
திருமதி.ஆ.அனுசித்ரா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம், திருநெல்வேலி

Scanned with OKEN Scanner